## அறிமுகம்

தொடர்பு கொள்ளும் போது தகவலை மட்டும் பரிமாறிக் கொள்வதில்லை. மறு பக்கத்தில் உள்ளவருடன் நாம் தொடர்புகொள்ளும் போதெல்லாம் நம் உறவு நிலையினைத் தொடர்ச்சியாகக் கடத்திவருகிறோம். மேலும், எமது தொடர்பாடற் பாங்கு – உள்ளடக்கத்திலும் சரி உறவு மட்டத்திலும் சரி – எப்பொழுதுமே பண்பாட்டு அடிப்படையிலேயே உருவமைக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, இது தொனி, சைகைகள், இருவருக்கிடையிலான தூரம், எதிரிலுள்ளவருடனான உடல் தொடர்பு, தொடர்பாடலின்போது தொடக்கம் மற்றும் முடிவிலும் கேட்கும் (நலன் விசாரித்தல், விடைபெறுதல்), வழக்கமான செயற்பாடுகளின் நேரடித் தொடர்பு ஆகியவற்றுடன் அக்கறை என்பவற்றுடன் தொடர்புறுகிறது. இவையெல்லாம் பண்பாட்டு அடிப்படையிலான கூறுகளாகும். ஒருவர் தன் பண்பாட்டில் இவற்றை அவதானிக்க முடியாது. ஆனால் பல்பண்பாட்டு தொடர்பாடல் சூழலில், அதாவது இன்னொரு பண்பாட்டு உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ளும்போதே தவறாக விளங்கிக்கொள்ளுதல், தடுமாற்றத்துக்கு உள்ளாகுதல் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லலாம். ஒரு குடிபெயர்வுச் சூழலிலுள்ள புதியவர்களின் அணுகுமுறைகளினாலும், செயற்பாடுகளாலும் தொடர்பாடல் பாதிக்கப்படமுடியும். இதனால் பல்பண்பாட்டு தொடர்பாடலில் சுயநினைவுள்ள, வேறுபட்ட – உணர்திறன் கொண்ட அணுகுமுறை மிகவும் இன்றியமையாதது, இது பல் பண்பாட்டு பன்மொழிச் சூழலில் இறைமைத் தன்மையுடன் கூடிய செயற்பாட்டுக்கு இட்டுச் செல்கின்றது.

பாடசாலைகள் பல்பண்பாட்டு ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்குப் பங்களிப்பை வழங்க முடியும் / வழங்க வேண்டும். இது பண்பாட்டு அடிப்படையில் பல்வகைத் தன்மையான வகுப்புக்களுடனான பெருங் கல்வி முறைமைக்கும் அத்துடன் மொழியியல் அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் ஒரே தன்மையான குழுவினருடனான பாரம்பரியமொழிக் கல்விக்கும் பொருந்துகிறது. இந்த அலகு பா.மொ.க வில் பல்பண்பாட்டு தொடர்பாடல் சார்ந்த ஆற்றலை வளர்ப்பதற்கான மதியுரைகளையும் எடுத்துக்காட்டுக்களையும் வழங்குகின்றது. வெவ்வேறு பயிற்சிகள் ஊடாக, நாடக நடிப்புக்கள், மாணவர்கள் தங்களது தொடர்பாடல் நடைமுறைகளை அடையாளம் கண்டு தங்கள் நடத்தைகளில் உருக்காட்டுவர். இயல்பாக, மாணவர்களுடைய வளங்களும் பட்டறிவுகளும் இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றன, ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைத் தொடர்பாடல் செய்யவும் இரு பண்பாடுகளுள்ளும் இடையேயும் செல்லவேண்டியுள்ளது.